## மாநில உரிமைகளை வென்றெடுக்கும்

# ஜனநாயகப் போராட்டத்தில் இணைந்து பயணிப்போம்!

### ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள உமர் அப்துல்லாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 18 –

“மாநில உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் இணைந்து பயணிப்போம்” வெற்றி காண்போம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள உமர் அப்துல்லா அவர்களுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சராக உமர் அப்துல்லா அவர்கள் பொறுப்பேற்றுள்ளதையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**ஜம்மு – காஷ்மீர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள உமர் அப்துல்லா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!**

**ஜம்மு – காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் மதிப்பிற்குரிய பரூக் அப்துல்லா அவர்கள் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு எனக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், தமிழ்நாட்டில் பெய்துவரும் கனமழையின் காரணமாகக் கண்காணிப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டியுள்ளதால், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரான தங்கை திருமதி. கனிமொழி அவர்களை என் சார்பாகவும் கழகத்தின் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவிக்க அனுப்பி வைத்தேன்.**

**இந்தியத் துணைக் கண்டத்தில் தென் முனையில் உள்ள தமிழ்நாடும் வடமுனையில் உள்ள ஜம்மு காஷ்மீரமும் உரக்கக் குரலெழுப்பும் மாநில உரிமைகளை வென்றெடுக்கும் ஜனநாயகப் போராட்டத்தில் இணைந்து பயணிப்போம்! வெற்றி காண்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## திருவள்ளூர் – காஞ்சிபுரம் – செங்கல்பட்டு மாவட்டங்களில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

### நிவாரண முகாம்களையும் பார்வையிட்டார்!

சென்னை,அக்.18-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மழை வெள்ள சீரமைப்பு பணிகள் மற்றும் நிவாரண முகாம்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் மழை வெள்ள சீரமைப்பு பணிகள் மற்றும் நிவாரண முகாம்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், இராமதாசுபுரம் ஈஷா ஏரியை நேரில் பார்வையிட்டு, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். மழைநீர் வரத்து பகுதிகளில் தண்ணீர் தடையின்றி வரும் வகையிலும், வெளிப்போக்கி பகுதி மற்றும் கால்வாய்களில் நீர் செல்லும் வகையிலும் தொடர்ந்து கண்காணித்து சீரமைப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறு நீர்வளத்துறை அலுவலர்களிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, திருநின்றவூர், ஏஞ்சல் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைக்கால நிவாரண முகாமில் சுகாதார வசதிகள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து நேரில் பார்வையிட்டு உறுதி செய்தார். நிவாரண முகாமில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு போர்வை, ரொட்டி உள்ளிட்ட பொருட்களை வழங்கினார். நிவாரண முகாமில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமில் மருந்து பொருட்களையும் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களிடம் தெரிவித்தார்.

தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், செம்பரம்பாக்கம் ஏரியினை பார்வையிட்டு, நீர்வரத்து மற்றும் நீர்வெளியேற்றம் குறித்து பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்தார். நீர் இருப்பை தொடர்ந்து கண்காணித்து மழைப்பொழிவுக்கு ஏற்றபடி உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அலுவலர்களிடம் தெரிவித்தார்.

பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், அகரம் தென், கிருஷ்ணாநகர் பகுதியில், மழைநீர் வடிகால் தூர்வாரப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டார். சென்னை, கோவிலம்பாக்கம் சுண்ணாம்பு கால்வாயில் நேற்றைய தினம் பார்வையிட்டு தெரிவித்த கருத்துகளின் படி, ஆகாய தாமரைகள் அகற்றப்பட்டு நீர் சீராக செல்வதை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று பார்வையிட்டு உறுதி செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டாக்டர் த.பிரபு சங்கர், (திருவள்ளூர்), திருமதி கலைச்செல்வி மோகன், (காஞ்சிபுரம்), ச.அருண் ராஜ், (செங்கல்பட்டு) கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி அனாமிகா ரமேஷ், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மின்னல் வேக நடவடிக்கை!

# பணியாளர்களைப் பாராட்டிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கனமழை காரணத்தால் பள்ளிக்கரணை – கோவிலம்பாக்கம் இடையேயுள்ள நாராயணபுரம் ஏரி மற்றும் அதற்கான கால்வாய்களை நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் ஆய்வு செய்தார். கோவிலம்பாக்கம் அம்பேத்கர் சாலை பாலத்தின் அருகே ஆய்வில் ஈடுபட்டிருந்த போது, அங்குள்ள கால்வாயின் மேற்கு பக்கத்தில் கரைகள் உயர்த்தப்பட்டு, ஆகாயத்தாமரை முழுமையாக அகற்றப்பட்டு உள்ளதை குறிப்பிட்ட அப்பகுதி மக்கள், மழைநீர் தடையின்றி வெளியேற ஏதுவாக கால்வாயின் கிழக்கு பக்கத்திலும் ஆகாயத் தாமரைகளை அகற்றித்தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில், உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கானப் பணிகளை நேற்று முன்தினம் மாலை ஆய்வு செய்த போது, ஆகாயத்தாமரையை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வந்தது. இந்த சூழலில், மூன்றாவது நாளாக இன்றும் நாராயணபுரம் ஏரிக்கான நீர்வழித்தடமாக உள்ள அக்கால்வாயில் ஆய்வு செய்தார். இன்றைய தினம் ஆகாயத்தாமரை முழுமையாக அகற்றப்பட்டு, கால்வாயின் வழியாக நாராயணபுரம் ஏரி நோக்கி மழைநீர் வேகமாக வெளியேறி வருகிறது. இதற்காக இரவு-பகலாக உழைத்தப் பணியாளர்களை நேரில் பாராட்டினார்.
















துணை முதலமைச்சர் அவர்களின் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அமைந்துள்ள லேடி வில்லிங்டன் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டார். மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ள நிலையில் மழையின் காரணமாக கட்டடங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து மாணவர்களின் வருகை குறித்து ஆசிரியப் பெருமக்களிடம் கேட்டறிந்தார். அப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறை கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டார்.

## கோவையில் வடகிழக்குப் பருவமழை:

# முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

### மின்சாரத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது!

கோவை, அக்.18-

வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது

இதில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மேயர் ரங்கநாயகி, மாநகர காவல் ஆணையாளர் பாலகிருஷ்ணன், கணபதி ராஜ்குமார், எம்பி துணைமேயர் வெற்றிச்செல்வன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதில், பருவ மழைக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளிடத்தில் கேட்டறிந்த அமைச்சர், மழை நீர் தேங்காத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், கன மழைக்கு வெள்ள நீர் வரும் இடங்கள் கண்டறியப்பட்டு துரித நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும், மீட்பு குழுவினர் தயார் நிலையில் இருக்க வேண்டும், அதிகாரிகள் முதல்வர் மற்றும் துணை முதல்வரின் எண்ணங்களுக்கு ஏற்ப விரைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் செந்தில்பாலாஜி, கோவை மாவட்டத்திற்கு கண்காணிப்பு பணியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாக 2 நாட்களாக கனமழை பெய்தும் பொது மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் உள்ளது. போக்குவரத்து நெரிசல் இல்லாமலும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மே மாதம் துவங்கி கால்வாய் தூர்வாருதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோளாக கூறுவது, கோவையில் 23 நாட்களாக பாதிப்புகளை செய்திகளாக வெளியிட்டது போன்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் தொடர்பாகவும் செய்திகள் வெளியிட வேண்டும்.

6 இடங்களில் பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. நீரை அகற்ற மாநகராட்சி பணிகள் தொடங்கியுள்ளது. வரக்கூடிய நாட்களிலும் அந்த இடங்களில் தண்ணீர் தேங்காத மாதிரி நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்தெந்த பாலங்களில் இரு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் செல்ல முடியும், அதுதொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டது. குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட வாகனங்கள் செல்லும் வகையில் ஏற்பாடு செய்ய திட்டம் உள்ளது.

கோவையிலும் மின்சாரம் தொடர்பாக மின்வாரிய அதிகாரிகள் ஆலோசனைகள் கூட்டம் நடந்துள்ளது. இதுவரை மின்சார பாதிப்புகள் இல்லை. மின் துண்டிப்பு இல்லை. பொதுமக்கள் பாதிப்பு இருக்கும் பட்சத்தில் மின்வாரிய எண்ணிற்கு அழைத்து தெரிவிக்கலாம்.

2021ல் ஏற்பட்ட பாதிப்பு 22ல் குறைந்துள்ளது. 22 பாதிப்பு 23 ல் குறைந்துள்ளது. 23 பாதிப்பு தற்போது குறைந்துள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் பாதிப்புகள் குறைக்கப்படும்.

மழையின் போது ஏற்படும் உயிர் சேதம் தடுக்க மின்சார விநியோகம் நிறுத்தி வைக்கப்படுகிறது. தற்போது கடந்த காலங்களில் உயிர் சேதம் குறைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் ஆட்சியர் உட்பட அனைத்து துறை அதிகாரிகள் இணைக்கப்பட்டு வாட்ஸ் அப் குழுக்கள் துவங்கப்பட்டு பாதிப்புகளை தடுக்க நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

அரசியல் காரணங்களுக்காக தவறான, பழைய வீடியோக்கள் வருகிறது. முதல்வர் அதிகமாக சுற்றுப் பயணம் செய்த மாவட்டம் கோவை. ஒரு சட்டமன்ற தொகுதி திமுக இல்லாவிட்டாலும், இங்கு தான் 234 தொகுதியும் முதல்வருக்கு ஒன்றுதான். சிறப்பு திட்டங்களை முதல்வர் வழங்குவார் என அமைச்சர் கூறினார்.



வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மேயர் ரங்கநாயகி, மாநகர காவல் ஆணையாளர் பாலகிருஷ்ணன், கணபதி ராஜ்குமார், எம்.பி. துணைமேயர் வெற்றிச்செல்வன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

